| | |
|---|---|
| *ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்* | *நாள்* :15.02.08 |

***வேதத்திலிருந்து உமக்கு வஹீ அறிவித்ததை ஓதுவீராக. மேலும் தொழுகையினை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக தொழுகை வெட்கக்கேட்டி -லிருந்தும் பகிரங்கமான தீமையிலிருந்தும் (ஒருவனை) தடுக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ்வை நினைவு கூருவது (ஏனையவற்றை விட) பெரிது. மேலும் அல்லாஹ் நீங்கள் செய்வதை அறிகின்றான் (29:46).***

பதினான்காவது நூற்றாண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமையாகத் திகழ்ந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள போதனைகள் மீண்டும் உலகில் நிலைநாட்டப்படுகின்றது என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் அறிந்துள்ளார். இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியிடம் பைஅத் செய்து அவரது ஜமாஅத்தில் இணையும் நற்பாக்கியத்தை பெற்றவர்களாக நாம் இருக்கின்றோம். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ள நாம் எந்த நோக்கத்திற்காக அவர்கள் அனுப்பப் பட்டுள்ளார்களோ அதை நிறைவேற்றுகின்றோமோ? அல்லது இந்த பைஅத் நம்மிடம் என்ன பொறுப்புகளை நிறைவேற்றும்படி கூறுகிறதோ அதை நாம் செய்தோமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்த அவர்களது உம்மத்தைச் சார்ந்த முன்னவர்கள் எவ்வாறு தமது பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்றினார்களோ அவ்வாறு நாமும் நமது பொறுப்புகளை செய்கின்றோமா? நிச்சயமாக முன்னவர்கள் தங்களது பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். அவர்கள் இறைவனது வசனங்களை கேட்டார்கள். அதன் மூலம் தங்களை தூய்மைப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தூய்மையடைந்த பிறகு அவர்கள் இறைவனுடன் ஒன்றும் அளவில் உயர்வான தகுதியைப் பெற்றார்கள். பிறகு அவர்கள் லட்சக்கணக்கான மக்களை தூய்மைப் படுத்தினார்கள். இப்படிப்பட்டவர்கள் நல்லெண்ணத்துடன் செயல்பட்டதைப் போன்றே நமது சிந்தனைகளும் செயல்களும் இல்லையென்றால் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணியை புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம் என்றே அதற்கு பொருள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**வ ஆஹரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்** - அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது உம்மத்தைச் சார்ந்த ஆஹரீன்களை (அதாவது தனக்கு பின்னர் வரக்கூடியவர்களை) தனது ஆன்மீக கவனம் மூலம் தங்களது சஹாபாக்களை தூய்மைப்படுத்தியது போன்றே தூய்மைப்படுத்துவார்கள்.

இந்த தூய்மைப்படுத்தும் பணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக விளங்குகின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே நடைபெற்றது. அந்த வாக்களிக்கப்பட்ட மஹ்திதான் ஒரு ஜமாஅத்தை ஏற்படுத்தி பின்னவர்களின் இந்த ஜமாஅத்தை முன்னவர்களோடு இணைக்க வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாழ்க்கையில் இப்படிப்பட்ட லட்சக்கணக்கான மக்களின் தூய்மையடைதல் நிகழ்ந்தது. இவ்வாறு தூய்மையடைந்த நல்லடியார்கள் ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அந்த ஜமாஅத் வளர்ச்சியடைந்து கொண்டே சென்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக அல்லாஹ் வாக்குறுதி செய்துள்ளான். அவன் தனது வாக்குறுதியினை உண்மையிலேயே நிறைவேற்றுபவன் என்பதை கடந்த காலத்திலும் நாம் கண்டுள்ளோம். இன்றும் நாம் காண்கின்றோம். எதிர்காலத்திலும் நாம் காண்போம். இன்ஷா அல்லாஹ்.

ஆனால், ஜமாஅத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் தமது தூய்மையடையும் நிலை பற்றி கவனத்துடன் செயல்பட்டால்தான் அல்லாஹ்வின் இந்த வாக்குறுதிகளும் நிறைவேறும் என்பதை அவர்கள் தமது மூளையில் எல்லா சமயத்திலும் பதிந்திருக்கும்படி செய்ய வேண்டும். எனவே, தன்னைப் பற்றியும், ஒரு கண்காணிப்பாளர் என்ற நிலையில் தனது மனைவி மக்கள் தொடர்பாகவும் அவர்களை இந்த தூய்மையடைதல் பக்கம் கவனம் செலுத்தும்படி செய்வத ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாக இருக்கின்றது.

**ஆஹரீன மின்ஹுªம்** என்ற சொற்கள் பன்மையில் ஏன் வந்துள்ளது? என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வர வேண்டியவர் தனி ஒரு நபராக இருக்கமாட்டார். மாறாக, அவர்கள் ஒரு ஜமாஅத்தாகி விடுவார்கள் என்பதை புரிய வைக்கும் நோக்கத்திலேயே **ஆஹரீன மின்ஹுªம்** என்று பன்மையில் அல்லாஹ் கையாண்டுள்ளான். இந்த ஜமாஅத்தை சார்ந்தவர்களுக்கு இறைவன் மீது உண்மையான நம்பிக்கை இருக்கும். இவர்கள் சஹாபாக்களின் நிறத்தைப் பெற்று அவர்கள் நுகர்ந்த நறுமணத்தை இவர்களும் நுகர்வார்கள்.

இந்த உயர்வான தகுதியை தாமும் பெற்று இதனை தமது மனைவி மக்களிடத்திலும் நிலைபெறச் செய்வதற்காகவும் இதனை மற்றவர்களிடத்திலும் தமது சுற்றுச் சூழலிலும் நிலைபெறச் செய்வதற்காகவும் ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். இந்த உயர் தகுதியை பெறுவதற்கு திருக்குர்ஆன் கூறியுள்ள வழிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும். அவற்றைப் புரிவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ள வழிமுறைகளை நாம் பேண வேண்டும்.

நஃப்ஸ் தூய்மையடைவதற்கும் தீமையிலிருந்து விலகுவதற்கும் ஒரு மிகப் பெரும் வழியாக தொழுகையை அல்லாஹ் கூறியுள்ளான். நான் தற்போது ஓதிய வசனத்தில் அல்லா கூறுகின்றான்.

**உத்லு மா ஊஹிய இலைக்க மினல் கிதாபி** - வேதத்திலிருந்து உமக்கு வஹீ அறிவித்ததை ஓதுவீராக. அதை மற்றவர்களுக்கு ஓதிக் காட்டுவீராக. **வ அகிமிஸ்ஸலாத்** மேலும் தொழுகையை நிலைநாட்டுவீராக. **இன்னஸ்ஸலாத்த தன்ஹா அனில் ஃபஹ்ஸாயி வல் முன்கர்** - நிச்சயமாக தொழுகை வெட்கக் கேட்டிலிருந்தும் ஒவ்வொரு வெறுக்கத்தக்க செயலிலிருந்தும் (ஒருவனை) தடுக்கின்றது. **வல திக்ருல்லாஹி அக்பர்** - அல்லாஹ்வை நினைவு கூர்வது நிச்சயமாக (ஏனைய எல்லாவற்றையும் விட) பெரிது. **வல்லாஹுª யஃலமு மா தஸ்னஊன்** - நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிந்துள்ளான். (29:46)

இந்த வேதத்தை ஓதுவதுடன் இதன் தூதுச் செய்தியை மற்றவர்களுக்கு எட்ட வைக்கும்படி அந்த வசனத்தில் கட்டளையிட்டுள்ள இறைவன் அத்துடன் தொழுகையை நிலைநாட்டுவீராக என்றும் கூறியுள்ளான். ஏனென்றால், தொழுகையை அதன் முழுமையான நிபந்தனைகளுடன் நிறைவேற்றுவதுடன் தூய்மையான மனதுடன் தொழுவதும் நாம் தூய்மையடைவதற்கான வழியாக அமையும். தூய்மையடைதல் தொடர்பான போதனைகளால் திருக்குர்ஆன் நிரம்பியுள்ளது. அவற்றை செயல்படுத்துவது அல்லாஹ்வின் உதவி மூலமாகவே நடக்கும். எனவே, முழுமையான மனத்தூய்மையுடன் ஒரு அடியான் அல்லாஹ்வின் முன்பு குனியும்போதுதான் அந்த போதனைகளின் தாக்கம் அவர் மீது ஏற்படும். தீமைகளிலிருந்தும் விலகியவாறு இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப ஒரு நம்பிக்கையாளர் செயல்படும்போது, மனத்தூய்மையுடன் தொழுப்பட்ட தொழுகைகளால், அதற்குப் பிறகும் நமது நாவுகளை அல்லாஹ்வின் நினைவால் ஈரமாக வைத்திருக்க முனையும்போது நிச்சயமாக அப்படிப்பட்ட நபர் தமது நஃப்ஸை தூய்மைப்படுத்தக்கூடியவராக ஆகி விடுவார்.

எனவே, தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துவது ஒவ்வொரு அஹ்மதியின் அடிப்படையான

பொறுப்பாக இருக்கின்றது. ஆனால், ஒன்று அல்லது இரண்டு நேர தொழுகைகளை தொழுவதன் மூலம் இந்த பொறுப்பை நாம் நிறைவேற்றி விடுவோமா? மாறாக, ஐவேளை தொழுகைகளையும் நாம் முறையாக நிறைவேற்ற அதிகமான முயற்சிகளை நாம் செய்ய வேண்டியது அவசியமாகும். உயர்வான தகுதிகளை பெற்றுக் கொள்வதற்காக நாம் மேற்கொள்ள இருக்கும் பயணத்தின் மைல் கற்களாக இந்த ஐவேளை தொழுகைகள் உள்ளன. ஐவேளை தொழுகைகள் நன்மைகளுக்குரிய விதைகளாக உள்ளன. அவ்விதைகளே கனி தரக்கூடிய மரங்களாக மாற வேண்டியதுள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் ஐவேளை தொழுகைகளை பேணுதல் மற்றும் நல்லொழுக்க நிலைமைகள் மூலமாகத்தான் அடையாளங்கண்டு கொள்ளப்படுவீர்கள். எவரிடம் தீமையின் விதை இருக்குமோ அவர் இந்த போதனைகளின்படி செயல்பட்டு அதில் நிலைநிற்க முடியாது.

எனவே, இந்த நன்மையின் விதையை நமது உள்ளத்தில் விதைத்தவாறு அதனை எந்த கால சூழ்நிலையும் வீணாக்கி விடாத அளவில் அதை பாதுகாத்து வளர்ச்சியடையும்படி செய்ய வேண்டும். இந்த தொழுகைகளை நாம் பாதுகாக்க வில்லையென்றால் வயலில் வளர்கின்ற பதரானது (களைச்செடி கள்) தானியங்களை வீணாக்கி விடுவது போன்றே இந்த தீமைகள் நன்மைகளை அமுக்கி விடும். எனவே, நமது தொழுகைகள் வலுவான வேர்களில் நிலைநிற்கும் வகையில் நாம் அவற்றை பாதுகாத்தால் அவை நிழல் தரும் மரங்களாகவும் கனி தரும் மரங்களாகவும் உருவாகி விடும். அவை எல்லா தீமைகளிலிருந்தும் நம்மை பாதுகாக்கும்.

எனவே, முதலில் தொழுகைகளை நிலைநாட்டுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். பிறகு அந்த தொழுகைகள் நன்மையில் நாம் நிலைத்திருப்பதற்குரிய வழியாகி விடும். இவ்வாறே ஒரு அஹ்மதி அடையாளங்கண்டு கொள்ளப்படுவார் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். நாம் இந்த அடையாளத்தை நிலைநாட்ட முயற்சி செய்கின்றோமா? இறைவணக்கத்தில் ஈடுபடுபவர்களாகவும் நல்லொழுக்கத்தில் உயர்வான நிலையை அடைந்தவர் களாகவும் இருக்கும் நிலையில் நாம் இனங்கண்டு கொள்ளப்படுகின்றோமா? என ஒவ்வொரு அஹ்மதியும் தன்னைப் பற்றியும் தனது குடும்பத்தைப் பற்றியும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதன் மூலமாகவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவு செய்தவர்கள் ஆவோம். இவ்வாறு நாம் ஆய்வு செய்தால் இந்த ஆய்வானது நிச்சயமாக நமது தூய்மையடைதலின் தரத்தை உயர்த்திக் கொண்டே செல்லும்.

**தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகை எப்படிப்பட்ட நன்மையாக இருக்கின்றதென்றால் அதை நிறைவேற்றினாலே ஷய்த்தானிய பலவீனங்கள் விலகி விடும். மேலும் இதற்கே துஆ என்று பெயர். இவ்விஷயத்தில் மனிதன் பலவீனமாக இருக்க வேண்டும் என்று ஷய்த்தான் விரும்புகின்றான். ஏனென்றால், எந்த அளவு அவர் சீர்திருத்தத்தில் ஈடுபட்டாலும் அதனை தொழுகை மூலமாகவே அவர் செய்வார் என்பதை ஷய்த்தான் அறிந்துள்ளான். எனவே, இதன் காரணமாக நாம் தூய்மையாக இருப்பது நிபந்தனையாக இருக்கின்றது. எதுவரை தீமைகள் மனிதனிடம் இருக்குமோ அதுவரை ஷய்த்தான் அவனை நேசிக்கின்றான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களது உள்ளத்தில் இறைவனின் மகிமையையும் அவன் மீதுள்ள நேசத்தையும் தொடர்ந்து நிலைநாட்டி வாருங்கள். இதற்கு தொழுகையை விட உயர்வான வேறு ஒரு பொருளும் இல்லை. ஏனென்றால், நோன்பு ஒரு வருடம் கழிந்த பிறகுதான் மீண்டும் வரும். செல்வம் படைத்தவர்களுக்குத்தான் ஸக்காத் கொடுக்க வேண்டியதுள்ளது. ஆனால், ஒவ்வொரு நிலையிலுள்ள

மனிதனும் தொழுகையை ஐந்து வேளையும் நிறைவேற்ற வேண்டியதுள்ளது. எனவே, அதை ஒருபோதும் வீணாக்கி விடாதீர்கள். மீண்டும் மீண்டும் தொழ வேண்டும். நான் எப்படிப்பட்ட ஆற்றல் உள்ளவன் முன்னிலையில் நிற்கின்றேனென்றால் அவன் நாடி விட்டால் இப்போதே எனது தொழுகையை அவன் ஏற்றுக் கொள்வான். இதே நிலைமையில் இதே நொடியில் அவனால் எனது தொழுகையை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். உலகிலுள்ள அரசர்களுக்கு தங்களது கருவூலங்கள் காலியாகி விடக்கூடாதே என்ற கவலை இருக்கும். வறுமை வந்து விடக்கூடாது என்ற கவலை அவர்களுக்கு இருக்கும். ஆனால், இறைவனின் கருவூலங்கள் எல்லா சமயத்திலும் நிரம்பியே இருக்கின்றன. மனிதன் அவன் முன்னால் நிற்கும்போது நான் அனைத்தையும் கேட்கின்ற, எல்லாவற்றையும் பற்றிய ஞானமுள்ள, எல்லாவற்றையும் நன்கு அறிந்த வல்லமையுள்ள இறைவன் முன்னால் நிற்கின்றேன் என்ற உறுதியான எண்ணத்துடன் நிற்க வேண்டியது அவசியமாகும். மிகவும் உருக்கத்துடன் அவர் துஆ செய்ய வேண்டும். தப்பெண்ணம் கொள்பவராகவும் அவநம்பிக்கை உடையவராகவும் அவர் இருக்கக் கூடாது. இவ்வாறு அவர் செய்தால் இறைவனது அருள்கள் அவருக்கு கிடைக்கும் வகையில் அவர் ஒரு இன்பத்தை பெற்றுக் கொள்வார். இறைவனும் அவருக்கு கிடைத்து விடுவான். இந்த வழிமுறையை பின்பற்றிச் செயல்பட வேண்டும். ஆனால், அநீதி இழைப்பவர், குழப்பவாதி ஆகியோரது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால், அவர்கள் இறைவனிடமிருந்து கவனமற்றவராய் இருக்கின்றார்கள். இறைவனும் அவர்களைப் பற்றி கவனமில்லாமல் இருக்கின்றான். ஒரு மகன் தனது தந்தையைப் பற்றிய அக்கறையில்லாமல் அவரை ஒரு பொருட்டாகவே கருதாமல் இருந்தால் தந்தைக்கும் தனது மகனைப் பற்றிய எவ்வித அக்கறையும் இருக்காது. அவ்வாறிருக்கும் போது இப்படிப்பட்டவர்கள் மீது இறைவன் ஏன் அக்கறை காட்ட வேண்டும்?

ஷய்த்தானுடன் போர் செய்வதற்கான ஆயுதம் தொழுகையாகும் என்பதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிவிட்டார்கள். ஷய்த்தான் எப்போதும் மூஃமின்களிடமிருந்து இந்த ஆயுதத்தை பிடுங்குவதற்கே முயற்சி செய்கின்றான். எனவே எவ்வாறு ஒரு நல்ல தளபதி தன் கையிலிருக்கும் ஆயுதம் எதிரிகளின் கைகளில் சென்று விடாமல் பார்த்துக் கொள்வாரோ அவ்வாறே ஒரு மூஃமினும் தனது இந்த ஆயுதத்தை பாதுகாத்து வைப்பதிலிருந்தும் ஒருபோதும் பின்வாங்க மாட்டார். தீமைகளின் பக்கம் அடிக்கடி கவனம் திரும்புவது மனிதனின் இயல்பாகும். எனவே அவற்றிலிருந்து தப்பிப்பதற்குரிய நிரந்தர வழியாகவே தமது தொழுகைகளை பாதுகாப்பதை அல்லாஹ் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் (எல்லாத்) தொழுகைகளையும் சிறப்பாக நடுத்தொழுகையையும் (அவற்றை நிலைநாட்ட) முழுக் கவனம் செலுத்தி அவற்றை பாதுகாக்க வேண்டும். அல்லாஹ்வின் முன்னிலையில் அவனுக்கு கீழ்ப்படிந்தவாறு நில்லுங்கள். (2:239)

தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். குறிப்பாக நடுத் தொழுகையை கவனத்தில் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். பல்வேறு திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் தங்களது அறிவிற்கேற்ப நடுத் தொழுகை என்பதற்கு பல கருத்துக்களை கூறியுள்ளனர். நடுத்தொழுகை என்பது தஹஜ்ஜுத் தொழுகையை குறிக்கும் என்று சிலரும், ஃபஜ்ர் தொழுகையை குறிக்கும் என்று சிலரும், அஸர் தொழுகையைக் குறிக்கும் என்று சிலரும் கூறியுள்ளனர். ஒவ்வொருவரது நிலைமைக்கு ஏற்ப எந்த தொழுகையின்போது உலகப் பணிகள் ஒருவரை தொழுவதிலிருந்தும் தடுக்கின்றதோ அல்லது சோம்பேறித்தனத்தின் காரணமாக எந்த தொழுகையில் ஒருவர் கவனமற்றவராக இருக்கின்றாரோ அதுதான் அவரது நடுத்தொழுகையாகும். அப்போதுதான் ஷய்த்தான் மனிதனின் கவனத்தை தொழுகையில் வைத்திருப்பதற்கு பகரமாக மற்ற விஷயங்களின் பக்கம் கொண்டு செல்கின்றான். அப்போது நாம் ஷய்த்தானிடமிருந்து தப்பித்து விட்டால், மேலும் ஷய்த்தானை நம்மீது ஆதிக்கம் செலுத்த

விடாமலிருந்தால் நாம் தொழுகைகளை பாதுகாப்பவர்களாக உள்ளோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலைமை இருந்தால் ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் அப்படிப்பட்ட தொழுகைகள் நம்மை பாதுகாக்கும். ஃபர்ளான தொழுகைகளை சுன்னத்தான தொழுகைகள் பாதுகாக்கும். சுன்னத்தான தொழுகைகளை நஃபிலான தொழுகைகள் பாதுகாக்கும். இதுவே ஒரு மூஃமினின் அடையாளமாக இருக்கும். பிறகு இப்படிப்பட்டவர்களின் அருகில்கூட ஷய்த்தான் வரமாட்டான். இது தொடராக செய்யப்பட வேண்டிய ஒரு செயலாகும். இதுவே உண்மையான கீழ்படிதலின் நிலையாகும். இன்றைய காலகட்டத்தில் அதிகமான பணிகளும் வேலைகளும் உள்ளன. எனவே **Busy** ஆக இருக்கின்றோம் என்ற பெயரில் தொழுகைகளை **ஜம்உ** செய்து (சேர்த்து) தொழுகின்றார்கள். தகுந்த காரணங்களும் தவிர்க்க முடியாத நிலைமையும் இருந்தால் இவ்வாறு தொழுகைகளை சேர்த்து தொழுவதற்கு அனுமதி இருக்கின்றது. சிலர் எவ்வித கட்டாய சூழ்நிலை இல்லாத நிலைமையிலேயே தொழுகைகளை சேர்த்து தொழுகின்றார்கள். ஆனால், அல்லாஹ் தொழுகைகளுக்கென்று குறிப்பிட்ட நேரங்களை நிர்ணயித்துள்ளான். ஐந்துநேரத் தொழுகைகளுக்கான நேரங்களை அவன் குறிப்பிட்டுக் கூறியுள்ளான்.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

சூரியன் சாய்ந்த நேரத்திலிருந்து இரவில் நன்றாக இருட்டி விடும் நேரம் வரை பல்வேறு நேரங்களில் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுவீராக. அதிகாலையில் குர்ஆன் ஓதுவதையும் கட்டாயமாக்கி கொள்வீராக. அதிகாலையில் குர்ஆன் ஓதுவது எப்படிப்பட்டதென்றால் அதற்கு சாட்சியமளிக்கப்படும். (17:79)

இந்த வசனத்தில் ளுஹர் தொழுகையின் நேரத்திலிருந்து ஆரம்பித்து ஃபஜ்ர் தொழுகை வரையிலுள்ள தொழுகையின் நேரங்கள் வரை குறிப்பிட்டு கூறப்பட்டிருக்கின்றது. தொழுகைக்காக குறிப்பிட்ட ஐந்து நேரங்கள் நிர்ணயிக்கப்படுவதற்கான காரணம் என்ன? ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதிலுள்ள நுட்பமான ஞானத்தை விளக்கிக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் தனது இயற்கைச் சட்டத்திற்கேற்ப துன்பங்களை ஐந்து வகையாகப் பங்கிட்டு வைத்துள்ளான். அதாவது, ***துன்பம் வருவதற்கான அறிகுறிகளைக் கண்டு அஞ்சுவது, துன்பங்களில் நுழைவது, பிறகு துன்பங்களைக் கண்டு அவநம்பிக்கை ஏற்படும் நிலைமை, பிறகு துன்பங்களின் இருள் நிறைந்த காலக்கட்டம், பிறகு இறைவனின் கருணையுடன் கூடிய விடியற்காலை உதயமாகுதல்*** என துன்பங்களின் ஐந்து நிலைமைகளுக்கு எதிரில் இறைவன் தொழுகைக்கான ஐந்து நேரங்களை நியமித்துள்ளான்.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஐவேளை தொழப்படும் தொழுகை தொடர்பாக இறைவன் வலுக்கட்டாயமாக அதை நம் மீது திணிக்கவில்லை. நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் உண்மையில் இவை ஆன்மீகநிலைமைகளைபிரதிபலிக்கும் படங்களாக உள்ளன. ***அகிமிஸ்ஸலாத்த லிதுலூகிஷம்ஸ்*** என அல்லாஹ் கூறுகின்றான். இந்த வசனத்திலுள்ள ***துலூக்*** என்ற சொல்லிற்கு பொருள் கொடுப்பதில் கருத்து வேறுபாடு இருந்தாலும் சூரியன் உச்சியிலிருந்து சாய்கின்ற நேரத்திற்கே துலூக் என்று நாம் கூறுகின்றோம். அந்த நேரத்திலிருந்து ஆரம்பித்து ஐந்து தொழுகைகளை அல்லாஹ் நிர்ணயித்துள்ளான். இதிலுள்ள நுட்பமான ஞானமும் இரகசியமும் என்ன? ஆன்மீகமான முறையில் மேற்கொள்ளப்படும் பணிவு, தாழ்மை ஆகியவையும் உச்சியிலிருந்து சாய்வதுடன்தான் ஆரம்பமாகின்றது. அவற்றிற்கும் ஐந்து நிலைமைகள்தான் வருகின்றன.

ஃபர்ளான தொழுகையும் துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றின் அடையாளங்கள் ஆரம்பமாகும் அந்த நேரத்திலிருந்து ஆரம்பமாகின்றது. மனிதனுக்கு ஏதாவது ஆபத்து அல்லது துன்பம் வரும்போது அவன் எந்த அளவு பணிவையும் தாழ்மையையும் கைக்கொள்கின்றான்?

இப்போது பூகம்பம் வந்து விட்டால் நமது இயல்பில் எந்த அளவு உருக்கமும் தாழ்மையும் வந்து விடுகின்றது. இவ்வாறே நீங்கள் சிந்தனை செய்து பாருங்கள். ஒரு நபர் மீது வழக்கு தொடரப்பட்டு விட்டால் அவருக்கு சம்மன் அல்லது வாரண்ட் வந்து விட்டால் இந்த சமயத்தில் வாரண்டை படித்துப் பார்த்த பிறகு அவனது வாழ்வில் பாதி பகல் கழிந்த பிறகு சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த நிலை போன்ற வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. ஏனென்றால் வாரண்ட் அல்லது சம்மனை படித்துப் பார்த்த பிறகு வழக்கை நடத்துவதற்கான வக்கீல் தக்க சமயத்தில் நீதிமன்றத்தில் இருப்பாரா? இருக்கமாட்டாரா? என்ற எண்ணம் அவருக்கு வருகின்றது. பல்வேறு விதமான சிந்தனைகளாலும் கவலைகளாலும் ஏற்படும் வீழ்ச்சியின் நிலையாகும்.

இந்த முதல் நிலைமை ளுஹர் தொழுகையின் நேரத்திற்கு ஒத்ததாக இருக்கின்றது. அதை பிரதிபலிக்கும் நிலைமை ளுஹர் தொழுகையில் இருக்கின்றது. அந்த மனிதன் மீது வரும் இரண்டாவது நிலைமை அவன் நீதிமன்றத்தின் அறைக்குள் நிற்கும் நிலைமையாகும். எதிர்தரப்பினரிடமிருந்தும் நீதிமன்றத்திலிருந்தும் அந்த மனிதனுக்கு எதிராக பல கேள்விகள் கேட்கப்படு கின்றன. அது மிகவும் சிரமப்படுகின்ற நிலைமையாக இருக்கும். இந்த நேரமும் நிலைமையும் அஸர் தொழுகைக்குரிய முன்னுதாரணமாக இருக்கின்றது. ஏனென்றால், அஸர் என்ற சொல் கசக்கிப் பிழிவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். நிலைமை இன்னும் மோசமாகி அந்த மனிதனுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்படும்போது அவனிடத்தில் நிராசையும் அவநம்பிக்கையும் அதிகமாகி விடும். ஏனென்றால், தண்டனை கிடைக்கப்போகின்றது என்று அவன் நினைக்கின்றான். இது மக்ரிப் தொழுகையை பிரதிபலிக்கும் நேரமாகும். பிறகு அந்த மனிதன் தொடர்பாக தீர்ப்பு கூறப்பட்ட பிறகு அந்த மனிதன் கான்ஸ்டபிள் அல்லது கோர்ட் இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகுள்ள அந்த நேரம் ஆன்மீகமான முறையில் இஷா தொழுகையை பிரதிபலிக்கும் படமாக இருக்கின்றது. எதுவரையென்றால், கிழக்கு வெளுக்கின்ற அதிகாலை நேரம் வெளிப்படுகின்றது. மேலும் **இன்ன மஅல் உஸ்ரி யுஸ்ரன்** - நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகமுண்டு (94:7) என்ற நிலைமை அவனுக்கு ஏற்படுகின்றது. அப்போது ஆன்மீகமான முறையில் அவனது நிலை ஃபஜ்ர் தொழுகையின் நேரத்திற்கு ஒத்ததாக அமைந்துள்ளது. மேலும் ஃபஜ்ர் தொழுகை இந்த ஆன்மீக நிலைமையை ஒத்ததாக அதை பிரதிபலிக்கும் படமாக இருக்கின்றது.

நான் படித்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மேற்கோளில் மனிதனின் உலக நிலைமையை கண் முன்னால் வைத்து உதாரணம் மூலம் அவற்றை நமக்கு அவர்கள் விளக்கித் தந்துள்ளார்கள்.

**துலூக்** என்ற சொல்லுக்கு அகராதியில் மூன்று பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றது. சில அகராதிகள் இந்த மூன்று பொருள்களையும் ஏற்றுக் கொள்கின்றன. அதன் ஒருபொருள் சூரியன் சாய்தல் என்பதாகும். இரண்டாவது பொருள் சூரியன் மீது மஞ்சள் நிறம் தோன்ற ஆரம்பித்தல் என்பதாகும். அந்த நேரத்திற்கும் துலூக் என்றே கூறப்படும். இதன் மூன்றாவது பொருள் சூரியன் அஸ்தமித்தல் என்பதாகும்.

உலக உதாரணங்களை வைத்து நாம் பார்க்கும் போது ஒரு மனிதனுக்கு துன்பம் வருகின்றபோது அவன் எந்த அளவு தாழ்ந்து விடுகின்றான்? எந்த அளவு கவலையடைகின்றான்? உதாரணமாக, ஒரு நபருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டு விட்டால் அவருக்கு பல்வேறு வகையான கவலைகள் வந்து விடுகின்றன. வழக்கை நடத்துவதற்கு வக்கீல் கிடைப்பாரா? கிடைக்கமாட்டாரா? என்ற கவலை இருக்கும். அவ்வாறு வக்கீல் கிடைத்து விட்டாலும் அவரால் இந்த வழக்கை சரியான முறையில் வாதிக்க

முடியுமா? முடியாதா? என்ற கவலை இருக்கும். பிறகு தீர்ப்பு எவ்வாறு அமையும் என்ற கவலை வந்து விடும். இவ்வாறு மிகுந்த கஷ்டமான நிலைமையில் அவர் இருப்பார். அவநம்பிக்கையின் நிலை உருவாகி விடும். பிறகு நிம்மதியிழந்தவாறு இந்த நிலைமையிலிருந்து தப்பிப்பதற்கு அவர் முயற்சி செய்கின்றார். அவருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கான தீர்வைத் தேட அவர் முயற்சி செய்வார். எனவே, சூரியன் உச்சியிலிருந்து சாய்கின்ற இந்த உலக உதாரணத்திற்கு எதிரில் ளுஹர் தொழுகை வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் ஒரு மனிதன் தனது ஆன்மீக நிலைமையை சிந்தித்தவாறு அல்லாஹ்வின் முன்பு குனிய வேண்டும். அவனிடம் உதவி கேட்க வேண்டும். பிறகு உலக வழக்குகளில் வாரண்ட் வந்த பிறகு குற்றவாளிக் கூண்டில் மனிதன் ஏறி நிற்க வேண்டியது வரும். அங்கு நீதிபதி அந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்பார். அப்போது அந்த மனிதரிடம் கேள்விகள் கேட்கப்படும்போது அவன் அஞ்சுகின்றான். தான் பாவமற்றவன் என்பதை நிரூபிப்பதற்காக அந்த மனிதன் முயற்சி செய்கின்றான்; அல்லது மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பான். அஸர் தொழுகையின் நிலைமை இவ்வாறானதேயாகும். அல்லாஹ்வை தொழுகையில் நினைவு கூர்ந்தவாறு தவறுகளிலிருந்தும் கவனமற்ற நிலைமையிலிருந்தும் அவன் நம்மைக் காப்பாற்றி நம்மை மன்னிக்க வேண்டும். முழு பகலும் நம்மிடமிருந்து ஏற்பட்டுள்ள தவறுகளை மன்னித்து அவன் நமது ஆன்மீக நிலைமையை நிலைபெறச் செய்வதற்காக நாம் அவனது உதவியைத் தேட வேண்டும். அதற்குப் பிறகு அந்த மனிதனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் உதாரணம் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது நீதிமன்றம் அவனுக்கு எதிராக தீர்ப்பு எடுத்திருக்கின்றது. நமக்கு எதிராக தீர்ப்பு கூறப்பட்டு விட்டதால் நமக்கு தண்டனை கிடைக்கும் என்ற அச்சம் அம்மனிதனுக்கு ஏற்படுகின்றது. அதனால் நிம்மதியின்மையும் அவநம்பிக்கையும் அதிகமாகி விடுகின்றது. எனவே இந்த நிலைமைக்கு எதிரில் மக்ரிப் தொழுகை வைக்கப்பட்டுள்ளது. ஒரு மூஃமின் தனது பகலை பார்க்கும்போது எதுவுமே அவனுக்கு தெரியாது. தனது செயல்களை அவன் பார்க்கும்போது அவை ஞானமற்றவையாகத்தான் இருக்கும். பிறகு அவர் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிகின்றார். அவனிடம் அடைக்கலம் கோரியவனாய் அவனிடமிருந்து பாவமன்னிப்பை அம்மனிதன் கேட்கின்றான். இந்த நிலைமைக்கு எதிரில் மக்ரிப் தொழுகை வைக்கப்பட்டுள்ளது. இறுதியில் அவன் குற்றவாளி என நீதிமன்றம் நிரூபித்த பிறகு அம்மனிதனை நீதிமன்றம் போலீஸிடம் ஒப்படைக்கின்றது. பிறகு அவனுக்கு தண்டனை கிடைப்பது ஆரம்பமாகி விடுகின்றது. இந்த நிலைமைக்கு எதிரில் இஷா தொழுகை வைக்கப்பட்டுள்ளது. இரவு இருள் நிறைந்ததாக இருக்கின்றது. அவனால் எதையும் பார்க்க முடியாது. குற்றவாளி கருப்பு அறையில் அடைக்கப்படுகின்றார். அப்போது ஒரு மூஃமின் பகல் நேரத்தில் செய்த எல்லா செயல்களும் அவன் கண் முன்னால் சுற்றி சுற்றி வரும். எவ்வாறு சிறைச்சாலையில்அடைபட்டு கிடக்கும் கைதி இருள் நிறைந்த அறையில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுதலையைப் பெற தன்னுடன் கருணையுடன் நடந்து கொள்ளும்படி கேட்பாரோ அவ்வாறே இஷா தொழுகையின் நேரமும் அமைந்திருக்கின்றது. வெளிப்படையாக வருகின்ற இந்த இரவுகள் போல் எனது ஆன்மீக வாழ்க்கையில் இரவுகள் வந்து விடக் கூடாது என்ற உணர்வை இஷா நேரத்தின் இரவுகள் ஒரு மூஃமினுக்கு புகட்ட வேண்டும். இந்த இரவுகள் நீளமானதாக ஆகிவிடக் கூடாதே! மறைவாக நான் செய்த பாவங்களும் நான் இழைத்த கொடுமைகளும் நிரந்தரமாக என்னை ஷய்த்தானின் மடியில் எறிந்து விடக்கூடாதே என்ற கவலை ஒரு மூஃமினுக்கு வரும்போது அவர் நிம்மதியிழந்தவராக அல்லாஹ்வின் முன்பு குனிகின்றார். கண்ணீர் சிந்துகின்றார். அல்லாஹ்வே! இந்த வெளிப்படையான இருள்களை போல் எனது ஆன்மீக வாழ்வில் நிரந்தரமாக இருள்கள் வந்துவிடக் கூடாது. என்னை உனது அடைக்கலத்தின்கீழ் எடுத்துக் கொள்வாயாக! என்மீது எப்போதும் அந்த ஆன்மீக சூரியன் உதித்தவாறே இருக்க வேண்டும். எனது ஆன்மீக வாழ்வில் ஒருபோதும் வீழ்ச்சி ஏற்படக் கூடாது. அதன் காரணமாக நான் இருள்களில் திசை தெரியாமல் வழி தவறிச் சென்று விடக் கூடாது. இப்படிப்பட்ட நிலைமைகளை உணர்த்தவே இஷா தொழுகை வைக்கப்பட்டுள்ளது. இதற்காக அவர் துஆ செய்கின்றார்.

இறுதியில் கைதி விடுதலையடைந்த பிறகு எவ்வாறு வெளியுலகத்தை கண்டு மகிழ்ச்சி அடைவாரோ அவ்வாறே ஒரு மூஃமின் ஃபஜ்ர் தொழுகையைக் கண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். அல்லாஹ்வே! எவ்வாறு பகல் பொழுது உதயமாகப் போகின்றதோ அவ்வாறே எனது ஆன்மீக வாழ்விலும் எப்போதும் பகல் உதயமாகிக் கொண்டேயிருக்க வேண்டும். நான் ஒருபோதும் இருள்களில் வழிதவறிச் சென்று விடக் கூடாது என்று கூறுவார்.

எனவே, ஐவேளை தொழுகையின் நேரங்கள் ஒரு மூஃமினின் ஆன்மீக நிலைமையை ஆய்வு செய்து பார்ப்பதற்கு வைக்கப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறுதியில் ஒரு மூஃமினுக்கு இன்ன **மஅல் உஸ்ரி யுஸ்ரா** - நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகமுண்டு (94:7) என்ற நிலைமை வந்து விடும் எனக் கூறியதன் கருத்து என்னவென்றால் ஒரு நம்பிக்கையாளர் ஃபஜ்ர் தொழுகையில் சோம்பேறித்தனம் காட்டக் கூடாது. ஏனென்றால், இது உங்களது நிலைமைகளில் எளிதை ஏற்படுத்தக்கூடிய நேரமாக இருக்கின்றது. எனவே, இதிலிருந்து பலன் பெறுங்கள். உங்கள் படுக்கையை சுகம் தரக்கூடிய இடமாக கருத வேண்டாம். இப்போது சுகத்தை நீங்கள் பெற வேண்டும் என்றால் உங்களது ஆன்மீக நிலைமையை நீங்கள் சீர் செய்வதன் மூலமே அது கிடைக்கும். இந்த நிலைமைகள் தான் ஒரு நம்பிக்கையாளர்களின் வாழ்வில் புரட்சியை ஏற்படுத்தும் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

தொழுகையை அதன் குறித்த நேரத்தில் நிறைவேற்றுவதையும் அல்லாஹ் நம்பிக்கையாளர்கள் மீது கடமையாக்கியுள்ளான். அல்லாஹ் இது தொடர்பாக கூறுகின்றான்:

***இன்னஸ்ஸலாத்த கானத் அலல் மூஃமினீன கிதாபன் மவ்கூதா*** - நிச்சயமாக தொழுகை, நம்பிக்கை கொண்டவர்கள் (முறைப்படி) குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகும். (4:104)

நாம் இந்த முக்கிய கட்டளையைப் பேணி நடப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்யும் பணிகளில் அவர்களுக்கு ஆதரவாக நாமும் இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக! நாம் நமது உள்ளங்களை தூய்மைப் படுத்தாத வரையில் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவி செய்பவர்களாக ஆக முடியாது. நாம் நமது தொழுகைகளை பாதுகாத்தவாறு அவற்றைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றாத வரையில் நாம் தூய்மையடைய முடியாது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகுந்த வேதனையுடன் போதனை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

தொழுகை இறைவனுக்குரிய உரிமையாகும். அதை சிறப்பாக நிறைவேற்றுங்கள். இறைவனின் எதிரிகளிடம் அவர்கள் கூறுவதெற்கெல்லாம் ஆமாம் போடாதீர்கள். எப்படிப்பட்ட இழப்புகள் ஏற்பட்டாலும் தொழுகையை ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள். தொழுகை கெட்ட சகுனமாக இருக்கின்றது; தொழ ஆரம்பித்ததிலிருந்து எங்களுக்கு இந்த இந்த இழப்புகள் ஏற்பட்டன என்றெல்லாம் கூறுபவர்கள் காஃபிராகவும் நயவஞ்சகராகவும் இருக்கின்றார். தொழுகை ஒருபோதும் இறைவனின் கோபத்தைப் பெறுவதற்கான வழியல்ல. எவர் தொழுகையை கெட்ட சகுனம் என்று கூறுகின்றாரோ அவரிடம்தான் விஷம் இருக்கின்றது. நோயாளிக்கு இனிப்பு கசப்பாக இருப்பது போன்றே இப்படிப்பட்டவர்களுக்கு தொழுகையில் இன்பம் கிடைப்பதில்லை. தொழுகை மார்க்கத்தை சரிசெய்து விடும். நல்லொழுக்கத்தை சரிசெய்து விடும். உலகத்தை சரிசெய்து விடும். உலகிலுள்ள எல்லா இன்பங்களை விடவும் தொழுகையிலுள்ள இன்பம் மிகைத்து நிற்கின்றது. பௌதீக சந்தேகத்திற்காக

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்த பிறகு அதன் விளைவு நோய்களாக வெளிப்படுகின்றது. ஆனால், தொழுகையோ இலவசமாக அவனுக்கு கிடைக்கும் சுவர்க்கமாகும். திருக்குர்ஆனில் இரண்டு சுவர்க்கங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதில் ஒன்று இவ்வுலகில் கிடைக்கும் சுவர்க்கமாகும். அது தொழுகையிலுள்ள இன்பமாகும். தொழுகை ஒரு தேவையற்ற வரி செலுத்துவது போன்ற ஒன்றல்ல. மாறாக, அடியானுக்கு இறைவனுடன் ஒரு நிரந்தர உறவு இருக்கிறது. இந்த உறவை நிலைநாட்டுவதற்காகவே இறைவன் தொழுகையை ஏற்படுத்தியுள்ளான். அதில் ஒரு இன்பத்தை அவன் வைத்திருக்கின்றான். அதன் மூலம் உறவு நிலைநிற்கும். புதிதாக திருமணத் தம்பதிகளாய் இணைந்துள்ள மணமகன் மற்றும் மணமகளுக்கு இடையிலுள்ள உறவில் இன்பம் கிடைக்கவில்லை என்றால் குழப்பம் நிலவுவது போன்றே தொழுகையில் இன்பம் கிடைக்கவில்லையென்றால் இறைவனுடனுள்ள உறவு முறிந்து விடும். அந்த உறவு நிலைத்திருப்பதற்காக கதவுகளை அடைத்து விட்டு தனிமையில் துஆ செய்ய வேண்டும். அந்த இன்பம் கிடைக்க துஆ செய்ய வேண்டும். மனிதனுக்கு இறைவனுடன் உள்ள உறவு மிகவும் ஆழமானதும் ஒளிகளால் நிரம்பி இருப்பதுமாகும். அந்த உறவு ஏற்படாத வரை மனிதன் மிருகமாகத்தான் இருக்கின்றான்.

அடுத்து, நமது உள்ளங்களை காயப்படுத்துகின்ற ஒரு வேதனை நிறைந்த செய்தியை கூறவுள்ளேன். இது எல்லா அஹ்மதிகளுக்கும் தெரிந்த செய்திதான். பலரும் இந்த செய்திகளை கேட்டிருப்பார்கள். பத்திரிகைகளிலும் இந்த செய்தி வந்திருக்கின்றது. டென்மார்க்கிலுள்ள ஒரு பத்திரிகையானது கொடூரமான இழிவான தனது சிந்தனையை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றது. தனது உள்ளத்திலுள்ள அழுக்குகளையும், அகத்திலுள்ள வெறுப்பையும், காழ்ப்புணர்ச்சியையும் அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். போலீஸ், கேலிச் சித்திரத்தை வரைந்தவர்களை அடிக்க முற்பட்ட 3 நபர்களை கைது செய்துள்ளது. அவர்களை பழிவாங்குவதற்காகவே நாங்கள் இதை செய்கின்றோம் என அவர்கள் சாக்குப்போக்கு காரணங்களை கூறியிருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்தி மிகவும் இழிவான கேலிச் சித்திரங்களை இவர்கள் வரைந்துள்ளார்கள். இந்த குற்றம் சரியானதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் போலீஸ் அவர்களை பிடித்த பிறகு சட்டம் அவர்களுக்கு தண்டனை வழங்கும். ஆனால், அதை காரணமாக வைத்து மற்ற முஸ்லிம்களின் உள்ளத்திற்கு வேதனை அளிப்பதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? நாங்கள் நீதியை நிலைநாட்டுபவர்கள் என இவர்கள் பெரிதாகக் கூறுகின்றார்கள். ஒருவர் அநீதி இழைக்க இன்னொருவருக்கு தண்டனை வழங்குவதுதான் நீதியா? இதுதான் இவர்களது நீதியென்றால் தீர்ப்பளிப்பவர்கள் எல்லாரைக் காட்டிலும் சிறந்த தீர்ப்பளிக்கின்ற ஒரு நீதிபதி விண்ணில் அமர்ந்திருக்கின்றான். அவன் முழு பிரபஞ்சத்தின் இறைவனாவான். அவன் பிறகு தனது நீதியை நிலைநாட்டுவான். அவன் மிகைத்து நிற்பவனும் பழிவாங்குபவனுமாவான். மீண்டும் மீண்டும் குற்றம் புரிந்துவிட்டு அதிலிருந்து விலகாமல் இருப்பவர்களை அவன் பழிவாங்குவான். எனவே, இப்படிப்பட்ட இழிவான தவறான செயல்களை செய்பவர்களை அந்த இறைவனே பார்த்துக் கொள்வான். எவ்வாறு அவர்களைப் பிடிக்க வேண்டும் என்பதை இறைவன் நன்கறிவான். அவர்களுக்குப் புரிய வைத்து தெளிவுபடுத்த வேண்டிய பணி நமது பணியாகும். அதனை நாம் செய்து விட்டோம். மிக நன்றாக செய்து விட்டோம். இது தொடர்பாக பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினோம். கடிதங்கள் எழுதினோம். நேரில் இவர்களை சந்தித்து பேசினோம். அதற்குப் பிறகும் இவர்கள் இத்தகு தீய செயல்களிலிருந்து விலகவில்லையென்றால் இவர்களது பிரச்சனையை இனி அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட வேண்டும்.

அந்த தூய தூதர் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றி நடந்து அவற்றை நமது வாழ்விலும் கடைபிடித்து நடக்க நாம் முயற்சி செய்ய வேண்டியதே நமது பணியாகும். நமக்கு ஒரு எஜமானன் இருக்கின்றான். அந்த எஜமானனுக்கு எல்லாரையும்விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் நேசத்திற்குரியவர் களாக இருக்கின்றார்கள். எல்லா ஆற்றல்களும் வல்லமைகளும் அவனுக்கு உண்டு. அவன் தனது வல்லமையை வெளிப்படுத்திக் காட்டுவான். இன்ஷா அல்லாஹ்.

நமது உள்ளத்திலுள்ள காயங்களை அல்லாஹ்வின் முன்பு எடுத்து வைப்பதுதான் நமது வேலையாகும். அவன் முன்பு குனிந்தவாறு மன்றாடுவதே நமது பணியாகும். முன்பை விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூதும் ஸலாமும் ஓத வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் இவ்வாறு நடந்து கொள்வது ஒரு அஹ்மதியின் பொறுப்பாகும். முன்பை விட அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். முன்பை விட அதிகமாக உங்கள் நஃப்ஸை தூய்மைப்படுத்த நீங்கள் முயற்சி செய்யுங்கள். இவையே இவர்களை தோல்வி அடையச் செய்யும். நமக்கு வெற்றியும் கிடைக்கும் - இன்ஷா அல்லாஹ்.

நமது உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்கள் எப்படிப்பட்ட சமுதாயம் என்றால் அவர்கள் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக தங்களது உயிர்களை அர்ப்பணித்து விடுவார்கள். அப்படிப்பட்ட நபர்களுடன் உள்ளத்திலுள்ள அழுக்குகளை அகற்றி உறவாடுவதும் இவர்களது நண்பர்களாக ஆகுவதும் அவர்களுக்கு அவமரியாதையாகும். அப்படிப்பட்ட அவமரியாதையைவிட மரணிப்பதை அவர்கள் சிறந்ததாகக் கருதுகின்றார்கள். இரவு பகலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுவதே இவர்களின் வேலையாக இருக்கின்றது. தங்களது பத்திரிகைகளிலும், நூல்களிலும், பிரசுரங்களிலும் மிகவும் கண்ணியக் குறைவாக அவர்களது பெயரை இவர்கள் கூறுகின்றார்கள். மிகவும் தீய சொற்களால் அவர்களை நினைவு கூருகின்றார்கள். நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட மக்கள் தங்கள் சமுதாயத்திற்கும் நன்மையை நாடுபவர்கள் அல்ல. ஏனென்றால் இவர்கள் தமது சமுதாயத்தினர் செல்லும் வழிகளில் முட்களை விதைக்கின்றார்கள். நான் உண்மையாகவே கூறுகின்றேன். நாங்கள் காடுகளிலுள்ள பாம்புகளிடமும் கொடிய விலங்குகளிடம் கூட சமாதானம் செய்து கொள்வோம். இது சாத்தியமுள்ள ஒன்றாகும். ஆனால் இறைவனின் தூய நபிமார்களின் மகிமைக்கு எதிராக தீய சொற்களை பேசுவதிலிருந்து விலகாதவர்களிடம் நாங்கள் ஒருபோதும் சமாதானம் செய்து கொள்ளமாட்டோம். அவர்கள் ஏசிப் பேசுவதிலும் தீய சொற்களை பயன்படுத்துவதிலும்தான் வெற்றி இருக்கின்றது என்று நினைக்கின்றார்கள். ஆனால், ஒவ்வொரு வெற்றியும் விண்ணிலிருந்தே இறங்குகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த அளவு தீய சொற்களாலும் பழித்துரைகளாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் முகமாக இவர்கள் தங்கள் பத்திரிகைகளிலும், நாளிதழ்களிலும் எழுதி வெளியிட்டிருக்கிறார்களென்றால் அவற்றை கேட்கும்போதே உடல் நடுங்குகிறது. மேலும் உள்ளம் அழுதழுது இவ்வாறு சாட்சி பகர்கின்றது. அதாவது இவர்கள் எங்கள் பிள்ளைகளை எங்கள் கண்களுக்கு முன்னால் கொலை செய்தாலும், உள்ளத்தாலும் உயிரை அர்ப்பணித்தவாறும் நாங்கள் இவ்வுலகில் நேசிப்பவர்களை எங்கள் கண் முன்னால் துண்டு துண்டாக வெட்டினாலும், நம்மை மிகவும் இழிவுடன் கொலை செய்தாலும், நமது எல்லா செல்வங்களையும் இவர்கள் அபகரித்துக் கொண்டாலும் ***வல்லாஹி*** (அல்லாஹ்வின் மீது ஆணையாக) ***சும்ம வல்லாஹி*** (மீண்டும் அல்லாஹ்வின் மீது ஆணையாக) நமக்கு ஒருபோதும் துக்கம் ஏற்பட்டிருக்காது. நமது ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை ஏசிப்பேசியதன் மூலமாகவும், அவர்களை இழிவுபடுத்தியதாலும் எந்த அளவு துக்கம் நமக்கு ஏற்பட்டுள்ளதோ அந்த

அளவு வேறு எந்த விஷயத்தாலும் எங்களுக்கு துன்பம் ஏற்படாது.

அல்லாஹ்வே! தங்களது ஆற்றல்களை எண்ணியவாறு பெருமிதம் கொண்டு எங்களது உள்ளங்களுக்கு வேதனையை தருபவர்களை நீயே பார்த்துக் கொள்வாயாக! நீயே இவர்களை கவனித்துக் கொள்வாயாக! ஏனென்றால், நீயே எல்லா ஆற்றல்மிக்கவர்களையும் விட ஆற்றல் மிக்கவனாவாய்.


| | |
|---|---|
| **KUTHBA**<br>***HAZRAT KHALIFATHUL MASIH V***<br>**AT BAITHUL FUTUH , LONDON**<br>**ON 15.02.08** | **TRANSLATED BY : M . RAFEEQ AHMAD**<br>**PUBLISHED BY: MAJLIS KHUDDAMUL AHMADIYYA - MELAPALAYAM,**<br>***Asura East Street, Melapalayam,***<br>***Tirunelveli - 627 005. Telefax : 0462-2352456*** |